**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண். 142/2015**

**வா.சா.3**

சாட்சியின் பெயர் : சிவபெருமாள்

தகப்பனார் பெயர் : நாகூர்தேவர்

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 07.11.2025ம் தேதி என்னால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**இடை மனு எண். 2 /2025 நாள் 03.11.2025ம் தேதியில் ஏற்பட்ட உத்தரவின்பேரில் அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு, சாட்சி ஆஜர்.**

**வாதி தரப்பு 3வது சாட்சியின் முன்விசாரணை**

எனக்கு சொந்த ஊர் வடுகபட்டி, நான் அங்கு 50 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். வழக்கின் உபயதரப்பினர்களை எனக்கு தெரியும்.

வடுகபட்டியில் இருந்து அய்யலூர் செல்லும் தார்சாலை தென்வடலாக செல்கிறது. வழக்கு சொத்துவிவரங்கள் பற்றி தெரியும். தார்சாலைக்கு கிழபுறம் தாவா சொத்து உள்ளது. சுமார் 20 செண்ட் நிலம் இருக்கும். அதில் 10-15 தென்னைமரங்கள், படப்பு, 4 மாடுகள், மாட்டுத்தொழுவம் மற்றும் குடியிருப்பு, குடிதண்ணீர் பைப் ஆகியவை உள்ளன.

தாவா சொத்தை வாதிகள் 25 வருடங்களாக அனுபவித்து வருகிறார்கள். தாவா தார்ரோட்டிற்கு மேற்குபக்கம் ஊர் உள்ளது. அதில் தெரு, பால்வாடி, கோவில், பள்ளிக்கூடம் ஆகியவை உள்ளன.

ஊர், தாவா சொத்து ஆகியவை நத்தம் புறம்போக்கில் உள்ளது. தாவா சொத்தில் பொதுப்பயன்பாட்டிற்கு என்று எந்த அமைப்பும் இல்லை.

**1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

1. தாவா சொத்தின் தற்போதைய சர்வே எண் தெரியாது. தாவா சொத்தின் பழைய சர்வே எண் என்ன என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. தாவா சொத்துக்கு நான் சொல்லியுள்ள 20 செண்ட் தவிர மீதம் எவ்வளவு உள்ளது என்றால் சுமார் 3 1/2 ஏக்கர் முதல் 4 ஏக்கர் இருக்கும். மேற்கண்ட 20 செண்ட் உட்பட மேற்படி சர்வே எண்ணில் உள்ள நிலம் அனைத்தும் நத்தம் புறம்போக்கு நிலமாக உள்ளது என்றால் சரிதான்.

3. பள்ளிக்கூடம், பால்வாடி, ரேடியோ செட், மேடை ஆகிய அனைத்தும் நத்தம் புறம்போக்கு நிலத்தில் தான் உள்ளன என்றால் சரிதான்.

நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்த பிறகு தாவா சொத்து வாதிகளுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்பது குறித்து வாதிகளிடம் கேட்டு தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான்.

4. வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாதை சம்பந்தமாக பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். சாட்சியம் அளிப்பதற்கு முன்பு வாதிகளிடம் அவர்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையை வாங்கி படித்து பார்த்தேனா என்றால் இல்லை.

5. வழக்கு சொத்தில் 10-15 தென்னைமரங்கள், படப்பு, 4 மாடுகள், மாட்டுத்தொழுவம் மற்றும் குடியிருப்பு, குடிதண்ணீர் பைப் ஆகியவை வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் கூறியுள்ளாரா அல்லது இல்லையா என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

6. எந்த வழக்கு மூலத்தின் அடிப்படையில் பாதைக்காக வாதிகள் வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

1,2 பிரதிவாதிகளுக்கு 1ம் வாதி சர்வே எண்.264/1ல் உள்ள வீட்டுமனை இடத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த இடத்தில் 1,2 பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ளனர் என்றால் சரிதான்.

7. பழைய சர்வே எண்.279/1, புதுசர்வே எண்.839/5ல் கட்டப்பட்டுள்ள வீட்டின் முன்பு உள்ள கிழமேல் பாதை வழியாக தான் 1,2 பிரதிவாதிகள் ஊருக்குள் வரமுடியும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது பக்கத்து வீட்டுக்காரர்.

8. 1ம் வாதி எனது நண்பர் என்பதால் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறி

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் விட்டுப்போன சங்கதிகளை நிவர்த்தி செய்வதற்காக வாதிகளுக்க ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4,5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

1. நான் வடுகபட்டியில் குடியிருந்து வருகிறேன்.

2. நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

3. தாவா இடத்தில் சர்வே எண் பற்றி தெரியாது. தாவா இடத்தில் விஸ்தீரணம் 20 செண்ட் நிலம். தாவா இடத்தில் 10-15 தென்னைமரங்கள், மாடுகள் 4, படப்பு, குடிநீர் பைப் ஆகியவை உள்ளன. அவை 25 வருடங்களாக உள்ளன.

4. தாவா இடத்தில் முருகன் கோவில் இல்லை. தாவா இடத்தில் மேற்குபக்கம் உள்ள ஊரில் முருகன் கோவில், பள்ளிக்கூடம், சத்துணவுக்கூடம், விநாயகர் கோவில், ரேடியோ செட், வண்டிப்பாதை ஆகியவை உள்ளன. பால்வாடிக்கு அருகில் ஒரு புளியமரம் உள்ளது.

5. தாவா இடம் நத்தம் புறம்போக்கு இடமாக உள்ளது என்றால் சரிதான். அதில் தான் வாதிகள் அனுபவித்து வருகிறார்கள். நான் சொல்வது போன்று 25 வருடங்களாக வாதிகள் அனுபவிக்கவில்லை என்றாலும், சமீபத்தில் தான் அதை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

PETER B Digitally signed by PETER B

**Principal District Munsif**
**Vedasandur**